மலைவாழ் மக்களுக்கான மருத்துவ சேவை வழங்கும் “குறிஞ்சி நலம்” எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனம்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, அக்.18-

மலைவாழ் மக்களுக்கான மருத்துவ சேவை வழங்கும் ”குறிஞ்சி நலம்” எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து, அதன் இலட்சினையை வெளியிட்டார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.10.2026), காலை, சென்னை அண்ணா அறிவாலயத்தில், சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் - முன்னாள் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் அவர்களின் “குறிஞ்சி நலம்” தன்னார்வ தொண்டு நிறுவனத்தை தொடங்கி வைத்ததோடு, அதற்கான இலட்சினையை வெளியிட்டார்.

இந்நிகழ்வின்போது, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு, எம்.எல்.ஏ., சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன், துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம்கவி, மாநில மருத்துவ அணிச் செயலாளர் டாக்டர் எழிலன் நாகநாதன், டாக்டர் சொக்கலிங்கம் மற்றும் சென்னை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட பகுதிச் செயலாளர்கள், வட்டச் செயலாளர் - நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

மா.சுப்பிரமணியன் பேச்சு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் துவக்கப்பட்ட “குறிஞ்சி நலம்” தன்னார்வ தொண்டு நிறுவனம் குறித்து விளக்கி மா.சுப்பிரமணியன் பேசியது வருமாறு:-

1980-ஆம் ஆண்டில் குறிஞ்சி மலர் எனும் டி.வி. சீரியல் மூலம் அரவிந்தராகத் தோன்றி, இன்றும் அரவிந்தனாக, அதாவது அரவிந்தன் என்றால் குறிஞ்சி மலர் வணக்கத்திற்குரிய தளபதி என்றும் சொல்லுமளவுக்கு ஒரு புகழ்பெற்ற தொலைத்தொடரில் நடித்து, இன்றைக்கு அந்தத் தொடரின் மூலம் குறிஞ்சி மலர் என்று சொன்னாலே ஓர் 50 ஆண்டு காலம், தளபதி அவர்களை நினைவுகூறுகிற வகையில் அந்த பெயர் நிலைத்திருக்கிறது. தமிழ் மண்ணில் குறிஞ்சி என்றால் மலையும் மலை சார்ந்த இடமும்,

மலைக் கிராம மக்களுக்கு மருத்துவச் சேவை!

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இரண்டாயிரம் மலைக்கிராமங்கள் இருக்கிறது. இந்த கிராமங்களில் 16 லட்சம் பழங்குடியினர் வசிக்கிறார்கள். இவர்களுக்கு முதன் முதலில் ஒரு தாயுமானவராய், மருத்துவச் சேவையை முதன்முதலில் தொடங்கி வைத்த பெருமை, நம் வணக்கத்திற்குரிய முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களையே சாரும்.

அவர் ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டே மாதக் காலத்தில் 2021 ஆகஸ்ட் திங்கள் 5ஆம் தேதி கிருஷ்ணகிரி மாவட்டம், சாமணப்பள்ளியில் மக்களைத் தேடி மருத்துவம் என்ற மகத்தானத் திட்டத்தைத் தொடங்கினார்.

ஒரு சில தலைவர்கள், திட்டத்தைத் தொடங்குவார்கள். திட்டத்தின் போக்குக் குறித்து அறிந்துகொள்ளமாட்டார்கள். ஆனால், நம்முடையத் தலைவர் திட்டத்தைத் தொடங்கி முதல் மருந்துப்பெட்டகத்தை தந்ததோடு மட்டுமல்லாமல், ஒரு கோடி பேரை இத்திட்டம் சென்றடைய வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

50 லட்சமாவது பயனாளிக்கு சித்தலப்பாக்கத்திற்கு வந்து அவரே, மருந்துப்பெட்டகத்தை வழங்கினார். 1 கோடியாவது பயனாளிக்கு, திருச்சி மாவட்டம் சன்னாசிப்பட்டிக்கு வருகைப்புரிந்து, மருந்துப் பெட்டகத்தை வழங்கினார். 2 கோடியாவது பயனாளிக்கும், ஈரோடு மாவட்டம், நந்தனாபுரத்திற்கு வருகைப்புரிந்து, மருந்துப்பெட்டகத்தை வழங்கினார்.



தமிழ்நாட்டிற்கு ஐ.நா. விருது!

இரண்டரை கோடி பயனாளிகளைக் கடந்து, இன்றைக்கு அந்தத் திட்டம், வெற்றிகரமாக சென்றுக்கொண்டிருக்கிறது. தீராவிட இயல் நாயகர், தளபதி அவர்களால் தொடங்கப்பட்ட அந்தத் திட்டம், உலக அளவில் புகழ்பெற்று, United Nations Interagency Task Force Award, என்கிற ஒரு ஐ.நா. விருது தந்து, தமிழ்நாட்டை அங்கீகரித்திருக்கிறது. மலைப் பிரதேசங்களில் வாழ்கிற மக்களுக்கு மருந்துதான் இது வரை சென்றுக்கொண்டிருக்கிறது. உயர் மருத்துவச் சேவை என்பது அவர்களுக்கு எட்டாக்கனியாக இருக்கிறது.

ஒரு மலைக்கிராமத்திற்கும், மற்றொரு மலைக்கிராமத்திற்கும் உள்ள இடைவெளி பாறைகளில் ஏறிசெல்வது, மலைகளில் ஏறி கடப்பது, என்கின்ற நிலையில்தான், வாகனங்கள் இருந்தாலும், செல்லமுடியாத நிலை இருக்கிறது. அவர்களுடைய கால்கள் தான் இருசக்கர வாகனங்கள், பழங்குடியினர் மக்களுடைய கால்கள்தான் மூன்று சக்கர வாகனங்கள், அவர்களுடைய பாதங்கள்தான் கார்கள் இப்படி வசித்துக்கொண்டிருக்கிற அவர்களுக்கு, மருத்துவம் என்பது எட்டாக்கனி. அந்த மருத்துவத்தை முதலில் தந்தது, வணக்கத்திற்குரிய தளபதி அவர்கள்.

மலைக் கிராமங்களில் மருத்துவ முகாம்கள்!

இன்றைக்கு சிறப்பு மருத்துவம் வழங்குவதையும், அவரே தொடங்கி வைக்கிறார். குறிஞ்சி நலம் என்கின்ற ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் மூலம் ஒவ்வொரு மாதமும், இறுதி ஞாயிற்றுக்கிழமையில் தமிழ்நாட்டில் இருக்கிற இரண்டாயிரம் மலைக் கிராமங்களையும் உள்ளடக்கி ஒவ்வொரு மலையிலும், மருத்துவ முகாம்கள் நடத்தி, இன்றைக்கு இந்தத் துண்டறிக்கையில் வெளியிட்டியிருக்கிறோம். முதல் 14 சிறப்பு மருத்துவர்கள் இந்த முகாமில் கலந்துகொள்கிறார்கள்.

தமிழ்நாட்டில் ஏற்கெனவே பணியாற்றி, ஓய்வு பெற்ற மருத்துவர்கள், தனியார் மருத்துவமனையை நடத்திக்கொண்டிருக்கிற மருத்துவர்கள், ஏறத்தாழ 20 மருத்துவர்களை அழைத்துக்கொண்டு நாங்கள் அங்கே செல்லவிருக்கிறோம். சென்று அந்த மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, உயர் சிறப்பு மருத்துவ சேவையை அவர்களை வழங்குவதோடு மட்டுமல்லாமல், அவர்களுடைய நாள்பட்ட நோய்பாதிப்புகளுக்கு, ஏற்கெனவே நமது கழகத் தலைவர் அவர்களால், ரூ.7500 கோடி ரூபாய் யுனைடட் இன்சுரன்ஸில் கட்டப்பட்டிருக்கிறது. அந்த காப்பீட்டுத்திட்டத்தில் அந்தத் தொகையைப் பெற்றுத் தருவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

மூன்றே ஆண்டுகளில் 16 லட்சம் பழங்குடியினருக்கு, அவர்களுடைய வாழ்வின் உண்மையான அர்த்தத்தை அறிமுகப்படுத்தி, உங்களுக்காக தளபதி இருக்கிறார். உங்களுக்கு தி.மு.க. இருக்கிறது என்பதை, உறுதிப்படுத்தும் அமைப்பாக குறிஞ்சி நலம் இருக்கும். எனவே இந்த குறிஞ்சி நலம் தன்னார்வ மருத்துவ தொண்டு நிறுவன அமைப்பின் இலச்சினையை தொடங்கி வைக்கிறார்கள். அந்த மக்களுக்கு வழங்குகிற துண்டுப் பிரசுரத்தையும் வெளியிடுகிறார்கள். அதன் முதல் மருத்துவ முகாம் இன்னும் நான்கு நாட்களில் குரங்கனி மலைகிராமத்தில் நடைபெற விருக்கிறது. தேனி மாவட்டத்தில் ஓ.பன்னீர்செல்வம், தங்கதமிழ்ச்செல்வன் எம்.பி., அவர்களும் பங்கேற்கிறார்கள்.

முப்பதுக்கும் மேற்பட்ட மலைக்கிராம மக்கள் பயன்பெறுகிற முகாம் வருகிற 25-ஆம் தேதி குரங்கனியிலும், நவம்பர் 29 அன்று 54 மலைக்கிராம மக்கள் பயன்பெற இருக்கிற வால்பாறையிலும் நடைபெற உள்ளது. கிருஷ்ணகிரியில் இருக்கிற மலைகள், தருமபுரியில் இருக்கிற மலைகள், திருவண்ணாமலையில் இருக்கிற மலைகள், சத்திய மங்கலம் காடுகள், அதேபோல் ஊட்டி, கொடைக்கானல், கொல்லிமலை, போன்ற எல்லா மலைக்கிராமங்களுக்கும் இந்த முகாம்கள் மூன்றே ஆண்டுகளில் ஒட்டு மொத்தமாய் நிறைவு செய்து, தமிழ்நாட்டில் இருக்கிற இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட கிராமங்களில் 16 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கும், தங்களுடைய வாழ்க்கையில் லட்சியத்தை ஏற்படுத்தும்.

இவ்வாறு மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

‘திராவிட மாடல்’ அரசின் பணிகளைக் கண்டு, மூடர் கூட்டத்தின் முதன்மை அமைச்சர் ஆதவ் அர்ஜூனா அலறுகிறார்!

முட்டாள் கூட்டத்தின் ‘முந்திரிக்கொட்டை’ உளறிக் கொட்டாமல் இருப்பது விஜய்க்குமே நல்லது!

தி.மு.க. ட்விட்டர் பதிவில் விமர்சனம்!

முட்டாள்கூட்டத்தின்முந்திரிக்கொட்டை உளறிக் கொட்டாமல் இருப்பது விஜய்க்குமே நல்லது.

மூடர் கூட்டத்தின் முதன்மை அமைச்சரே கேளும்.

‘கழாஅக்கால்’ பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர் குழாஅத்துப் பேதை புகல்.

அறிஞர்கள் கூடியுள்ள மன்றத்தில் ஒரு முட்டாள் நுழைவது என்பது அசுத்தத்தை மிதித்த காலைக் கழுவாமல் படுக்கையில் வைப்பதைப் போன்றது.

திராவிட மாடல் ஆட்சியின் மகத்தான சாதனையாக மட்டுமின்றி, கோவையின் புதிய அடையாளமாகவும் ஆகியிருக்கின்ற பெரியார் அறிவுலகம் திறப்பு விழா கண்டுள்ள நிலையில், தமிழ்நாட்டின் எதிர்காலத் தலைமுறையினரின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு, அந்த அறிவுலகம் அமைப்பதற்கு, திராவிட மாடல் அரசு மேற்கொண்ட பணிகளைக் கழகத் தலைவர் திராவிட நாயகர் அவர்கள் சுட்டிக்காட்டியிருப்பது கண்டு அலறுகிறார் அமைச்சர் ஆதவ் அர்ஜூனா. கழகத் தலைவர் பொறாமை கொண்டு பேசுவதாக ஆதவ் அர்ஜூனா தனது பேதைமையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

அ.தி.மு.க ஆட்சியில் திட்டமிடப்பட்ட மருத்துவக் கல்லூரிகளையும் பிற திட்டங்களையும் தி.மு.க ஆட்சியில் திறந்து வைக்கவில்லையா என்று கேட்டிருக்கிறார். முந்தைய ஆட்சியின் மக்கள் நலத் திட்டங்களைத் தொடர்வதுதான் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சி முதல் திராவிட நாயகர் ஆட்சி வரையிலான கழக அரசின் நிர்வாக இலக்கணம். சத்துணவை முட்டையுடன் கூடிய முழுமையான சத்துணவாகவும், கிருஷ்ணா நதி நீர் சென்னையின் தாகத்தைத் தணிக்கும் வகையிலும், அ.தி.மு.க ஆட்சியில் தீர்மானம் மட்டும நிறைவேற்றப்பட்ட எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தை அதே பெயரில் தொடங்கி, அதற்குரிய புதிய கட்டடத்தைக் கட்டியதும், அம்மா உணவகங்கள் உள்ளிட்ட முந்தைய ஆட்சியின் திட்டங்கள் மேலும் சிறப்புடன் தொடரவும் ஆட்சி நிர்வாகத்தை நடத்தியது திராவிட முன்னேற்றக் கழகம்.



2011-21 வரையிலான அ.தி.மு.க ஆட்சிக்காலத்தில் திட்டமிடப்பட்ட மருத்துவக் கல்லூரிகள், பேருந்து முனையங்கள், மேம்பாலங்கள் உள்ளிட்டவை பல்வேறு காரணங்களால் கால்வாசிகூட நிறைவேறாத நிலையில், மக்கள்பயன்பாட்டினைக் கருதி அவற்றை முழுமையாக நிறைவேற்றியது திராவிட மாடல் அரசு. அத்தகைய நிர்வாகத் திறன் ஏதுமற்ற த.வெ.க அரசின் முதல் போட்ட அமைச்சர் தி.மு.கவின் தலைவரைப் பற்றிப் பேசுவதற்கு எந்த யோக்கியதையாவது இருக்கிறதா?

சென்னை மெட்ரோ ரயில் திட்ட இரண்டாம் கட்டப் பணியிலோ, கோவை பெரியார் அறிவுலகம் கட்டடத்திலோ பெயிண்ட் அடிக்கும் வேலையையாவது த.வெ.க அரசு செய்திருக்குமா? முழுமையாகப் பணிகளை நிறைவேற்றியது திராவிட மாடல் அரசு. தேர்தல் நெறிமுறைகள் நடைமுறைக்கு வந்த காரணத்தால் அவற்றை செயல்பாட்டுக்குக் கொண்டு வர முடியாமல் போனது. சினிமா க்ளைமாக்ஸ் காட்சியில் வரும் சிரிப்புப் போலீஸ் போல த.வெ.க. ஆட்சியில் இவை திறந்து வைக்கப் பட்டுள்ளன.

மக்கள் பயன்பாட்டுக்காகவும், எதிர்காலத் தலைமுறையினரின் அறிவாற்றல் வளம் பெறவும் திராவிட மாடல் ஆட்சியில் திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்டவற்றைப் புதிய ஆட்சியாளர்கள் திறந்து வைப்பதில் தி.மு.கவுக்கும் எங்கள் தலைவருக்கும் எந்த விதப் பொறாமையும் கிடையாது. இன்னும் சொல்ல வேண்டுமென்றால் பெருமைப்படுகிறோம். வள்ளுவர்கோட்டம் தொடங்கி, கோயம்பேடு பேருந்து முனையம், ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை முதன்மைக் கட்டடம் உள்ளிட்ட பலவும் தி.மு.க ஆட்சியின் விளைவுகள் என்பது தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும். மூடர் கூட்டத்தின் முதலமைச்சரும் பிற அமைச்சர்களும் தான் பொறாமைக் குணத்துடன், மக்கள் நலத் திட்டங்களை இழிவுப்படுத்தும் வகையில், “தி.மு.க. காசில் கட்டினார்களா? தி.மு.க. தலைவர் சொந்தப் பணத்தில் கட்டினார்களா?” என்று வாய்க்கொழுப்புடன் பேசித் திரிகிறீர்கள்.

தாய்மாமன் தங்க மோதிரத் திட்டம் விஜய் பணமா? அல்லது அப்பன் வீட்டுப் பணமா? ஆதவ் அர்ஜூனாவின் லாட்டரி மாஃபியா பணமா? அரசாங்கக் கஜானாவிலிருந்து அள்ளித் தெளித்துத்தானே மார்பிலே பெருமை சந்தனம் பூசிக் கொள்கிறீர்கள்?

தி.மு.க.விடம் தமிழ்நாட்டை மக்கள் நம்பிக்கையுடன் ஒப்படைத்தபோது, அந்த நம்பிக்கையை நிறைவேற்றும் வகையில், திராவிட மாடல் அரசு நிறைவேற்றிய திட்டங்களைச் சொன்னால் ஆதவ் அர்ஜூனாக்கள் ஏன் அலற வேண்டும்? பெரியார் அறிவுலகத்தில் இருந்த ‘நான் முதல்வன்’ என்ற வார்த்தைகளைக் கண்டு முதலமைச்சர் விஜய்யும் அவருடனான மற்றும் பலரும் ஏன் பதறினார்கள்? தானே முதலமைச்சராக இருக்கும் நிலையிலும், நான் முதல்வன் என்று சொன்னால் அது மக்கள் மனதில் இன்னமும் கம்பீரமாக வீற்றிருக்கும் எங்கள் கழகத் தலைவர் திராவிட நாயகரைக் குறிக்கும் என்கிற அச்சத்தினாலா?

பெரியார் அறிவுலகம் திறக்கப்பட்டதில் தி.மு.க. பெருமைப்படுகிறது. 5 மாதத்தில் ஸ்டிக்கர் ஒட்டுவதைத் தவிர வேறெதுவும் உருப்படியாக செய்யத் திறனற்ற த.வெ.க. வெட்கப்படவேண்டும். முட்டாள் கூட்டத்தின் முந்திரிக்கொட்டை உளறிக் கொட்டாமல் இருப்பது விஜய்க்குமே நல்லது.



மதுரையில் தலைமை மின்வாரிய அலுவலகம் முன்பாக மின்வாரிய தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழு சார்பாக த.வெ.க. அரசைக் கண்டித்தும் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும் மண்டல செயலாளர் தனபால் தலைமையில் தொ.மு.ச. மின் கழக மண்டல செயலாளர் ராஜேஷ் கண்ணன் முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது, உடன் அனைத்து தொழிற்சங்க நிர்வாகிகள் அறிவழகன், அழகுசுந்தரம், டேவிட் பொன்னையா, கதிர்வேல் மற்றும் நிர்வாகிகள், உறுப்பினர்கள் திரளாகப் பங்கேற்றனர்.